# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 01.04.2026**

**முன்னிலை**
**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 11642/F/2024**

திரு.சா.சலீம், .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டக் கருவூலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
சேலம் மாவட்டம்-636 001.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.சா.சலீம், அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.எஸ்.ஸ்ரீதர்மூர்த்தி, கருவூல அலுவலர், மாவட்ட கருவூலம், மாவட்ட ஆட்சியர் வளாகம், சேலம் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 22.07.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், "ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்திற்கு உட்பட்ட தற்போது தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம் மேற்படி ஒன்றியம் சார்ந்த பகுதியில் 1960-ம் ஆண்டு முதல் 1965-ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் மகப்பேறு உதவியாளராக (Maternity Assistant) பணிபுரிந்து வந்து 1965-ஆம் ஆண்டு மரணமடைந்த திருமதி.நூருனிசா(லேட்)க/பெ.சான்பாஷா(லேட்) என்பவர் பணியில் சேர்ந்த நாள் பற்றிய ஆவணங்களை வழங்கிடுமாறு பணிந்து கேட்டுக்கொள்கிறேன்" என்பன போன்ற தகவல்களை 8 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், மாவட்டக் கருவூலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம் மாவட்டம்-636 001 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்/ கருவூல அலுவலர் (மு.கூபொ) மாவட்ட கருவூலம், சேலம்-636 001 அவர்கள் ந.க.எண்.711868/2024/E1, நாள்

09.08.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் வழங்கியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் பொதுத் அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால், 02.09.2024 தேதியிட்டு பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 01.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து ந.க.எண்.711868/2024/E1, நாள் 09.08.2024 தேதியிட்ட கடிதத்தில் தாங்கள் கோரும் தகவல் இவ்வலுவலகத்தைச் சார்ந்தது இல்லை எனவும், தகவல் வழங்கிட தடையாக எந்த சான்றாவணங்களும் இல்லை என்றும், மேலும் திருமதி.நூருனிசா(லேட்), என்பவர் இறுதியாக பணிபுரிந்த பொது அதிகார அமைப்பினை தொடர்பு கொண்டு தகவலை பெற்றுக்கொள்ளலாம் என்ற தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறான தகவல்களாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, சரியான தகவல்கள் ந.க.எண்.711868/2024/E1, நாள் 09.08.2024 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக பொது அதிகார அமைப்பால் முழுமையான தகவல்கள் வழங்கியுள்ளதை இவ்வாணையம் உறுதி செய்து ஏற்கிறது. இருப்பினும், பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கிறது.

- ***மனுதாரர் 22.07.2024 தேதியிட்ட 6(1)-ன் கீழான மனுவில் கோரியுள்ள தகவல்கள் தங்கள் அலுவலகம் சார்ந்ததல்ல என்பது குறித்து மனுதாரருக்கு ரூ.100/- மதிப்பிலான அரசு முத்திரைத் தாளில் பிரமாணப்பத்திரம் (Sworn Affidavit) ஒன்றினை மனுதாரருக்கு வழங்கிவிட்டு அதனை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அறிக்கையினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 30.04.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடப்படுகின்றது.***

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 11642/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டக் கருவூலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம் மாவட்டம்-636 001.

**<u>மனுதாரர்</u>**

திரு.சா.சலீம்,
4/76, பொதுப்பணித்துறை குடியிருப்பு,
சூளகிரி,
கிருஷ்ணகிரி மாவட்டம்-635 117.

Copy to: File NS/PA-